பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

27 11 2025 THURSDAY 7 15 AM

ஆகாஷவாணி – செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்திய விண்வெளி புத்தொழில் நிறுவனமான Skyroot-ன் வளாகத்தை காணொலி வாயிலாக இன்று திறந்து வைக்கிறார்.

2. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி, 2030ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது, நாட்டு மக்கள் அனைவருக்கும் பெருமையான தருணம் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. இந்தியா – இந்தோனேஷிய பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

4. ஹாங்காங்கில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 44-ஆக அதிகரித்துள்ளது.

5. சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் H.S. Prannoy, Manraj Singh, Tanvi Sharma ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

\>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்திய விண்வெளி புத்தொழில் நிறுவனமான Skyroot-ன் வளாகத்தை காணொலி வாயிலாக இன்று திறந்து வைக்கிறார்.

சுமார் இரண்டு லட்சம் சதுரஅடி பரப்பிலான இந்த வளாகத்தில் ஒவ்வொரு மாதமும் ஒரு ராக்கெட்டை கட்டமைக்கும் திறனுடன், பல்வேறு செலுத்து வாகனங்களை வடிவமைத்தல், மேம்படுத்துதல், சோதனை செய்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

செயற்கைக் கோள்களை சுற்றுப்பாதையில் செலுத்தும் திறன் கொண்ட விக்ரம்-1 ராக்கெட்டையும் பிரதமர் அறிமுகம் செய்கிறார்.

\>>>>><<<<<

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி, 2030ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது, நாட்டு மக்கள் அனைவருக்கும் பெருமையான தருணம் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர். பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வை மூலம், இந்தியா உலகளாவிய விளையாட்டுக்களின் மையமாக மாறியுள்ளது என்று கூறியுள்ளார்.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா வெளியிட்டுள்ள செய்தியில், அஹமதாபாத் நகரில் 2030ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ளதன் மூலம், இந்தியாவிற்கு சர்வதேச விளையாட்டுகளை நடத்தும் திறன் உள்ளது என்ற நம்பிக்கை உலக நாடுகளிடம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

இந்தியா – இந்தோனேஷிய பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இதில், பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இந்தோனேஷிய பாதுகாப்பு அமைச்சர் திரு. Sjafrie Sjamsoeddin ஆகியோர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து அவர்கள் இக்கூட்டத்தில் விவாதிக்கவுள்ளனர்.

அத்துடன் பிராந்திய பாதுகாப்பு குறித்த கருத்துக்களை அமைச்சர்கள் பரிமாறிக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

>>>>><<<<<

மத்தியப் பிரதேச மாநிலம், Ujjain-ல் புதிய ஆகாஷவாணி நிலையத்தை தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தொடங்கி வைத்தார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், மத்தியப்பிரதேச முதலமைச்சர் டாக்டர் மோகன் யாதவுடன் இணைந்து, தாம் தொடங்கி வைத்த இந்த புதிய உஞ்ஜைன் ஆகாஷவாணி நிலையம், விரைவில் 24 மணி நேரமும் செயல்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

Malwa மக்களின் நிகழ்ச்சிகளை newsonair செயலி மூலம் கேட்க முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

மால்வி பிராந்திய மொழியில் நாள்தோறும் இரவு மணி 7.20-க்கு செய்தி ஒலிபரப்பாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

Ujjain-ல் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டப்பட்டதாகவும், அந்நிகழ்ச்சியில் தாம் பங்கேற்றதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

**>>>>><<<<<**

அயோத்தியில் ராமர் கோவிலில் கொடியேற்றியது குறித்து பாகிஸ்தான் தெரிவித்துள்ள கருத்துக்கு, இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், மற்றவர்களுக்கு அறிவுரை கூறும் தகுதி அண்டை நாட்டிற்கு கிடையாது என்று கூறினார்.

பாகிஸ்தானில் சிறுபான்மையினருக்கு எதிரான சம்பவங்கள் நிகழ்ந்து வருவதாகவும், மனித சமூகத்திற்கு எதிரான இத்தகைய செயல்கள் குறித்து பாகிஸ்தான் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

சீனா குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர். அருணாச்சலப்பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும் அது பிரிக்க இயலாத பகுதி என்றும் தெரிவித்தார்.

இந்தியா – சீனா இடையே இருதரப்பு உறவுகளை மேம்படுத்த எல்லைப்பகுதியில் அமைதியை தொடர்ந்து பராமரிப்பது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அருணாச்சலப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் மீது சீனா மேற்கொண்ட நடவடிக்கைகள், பரஸ்பரம் இருதரப்பு நம்பிக்கையை கட்டமைக்கவோ, இருதரப்பு உறவுக்கு நலம் பயக்கவோ இயலாது என்று அவர் தெரிவித்தார்.

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் திருமதி. ஷேக் ஹசீனாவை நாடு கடத்த வேண்டும் என்று அந்நாட்டு அரசு விடுத்துள்ள கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

பங்களாதேஷ் நாட்டின் அமைதி, ஜனநாயகம் மற்றும் அந்நாட்டு மக்கள் நலனில் இந்தியா தொடர்ந்து அக்கறை கொண்டுள்ளதாகவும் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

இனி சர்வதேச திரைப்பட விழா குறித்த செய்திகள்...

(சவுண்ட் பைட் – Opening Music – 8 செகண்ட்ஸ்)

கோவாவில் நடைபெற்று வரும் சர்வதேச திரைப்பட விழாவில் பல்வேறு மொழி திரைப்பட வசனங்களை அனைவரும் கேட்கும் வகையில் சினி டப்ஸ் என்ற ஒலி செயலி நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன்மூலம் விரும்பும் திரைப்படங்களை பார்வையாளர்கள், தாங்கள் விரும்பும் மொழியில் காண முடியும்.

இந்த சினி டப்ஸ் செயலி மூலம் பார்வையாளர்கள் தாங்கள் விரும்பும் மொழியின், ஒலித்தளத்தை பதிவிறக்கம் செய்து, திரையில் காண முடியும்.

வசன வரிகள் செவித்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு எழுத்து வடிவில் அமைக்கப்பட்டிருக்கும்.

இது திரைப்பட ஆர்வலர்கள், மற்ற மொழி திரைப்படங்களை கண்டு ரசிப்பதற்கு உகந்ததாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சவுண்ட் பைட் – Closing Music – 8 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

சைப்ரஸ் நாட்டின் நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழு. குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்முவை புதுதில்லியில் சந்தித்து பேசினர்.

இருநாடுகளுக்கு இடையேயான தொடர்பு, பொருளாதார ஒத்துழைப்பு, பாதுகாப்பு ஒத்துழைப்பு, கலாச்சார உறவுகள் ஆகியவை குறித்து அவர்கள் விவாதித்தனர்.

இத்தகைய சந்திப்புகள் மூலம், இந்தியா – சைப்ரஸ் இடையேயான நட்புறவு மேலும் வலுப்பெறும் என்று குடியரசுத்தலைவர் நம்பிக்கை தெரிவித்தார்.

**>>>>><<<<<**

தில்லியில் காற்றின் தரம் தொடர்ந்து மோசமாக உள்ளதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

இன்று காலை 7 மணியளவில் காற்றின் தரக் குறியீடு 346-ஆக பதிவானது என்றும் அந்த வாரியம் கூறியுள்ளது.

இதற்கிடையே, ஹரியானா, சண்டிகர், ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் தில்லியில் இன்று பனிமூட்டம் காணப்படும் என்றும், பஞ்சாபின் சில பகுதிகளில் குளிர் நிலவக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

**>>>>><<<<<**

பிரான்ஸில் 2012ஆம் ஆண்டு நடைபெற்ற மறுதேர்தலின் போது, பிரச்சாரத்திற்கான நிதியை முறைகேடாக பயன்படுத்திய வழக்கில், அந்நாட்டு முன்னாள் அதிபர் திரு. Nicoles Sarkozy-க்கு விதிக்கப்பட்ட சிறை தண்டனையை அந்நாட்டு நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

இதில் ஒராண்டு சிறை தண்டனையில் ஆறு மாத தண்டனை காலத்தை ரத்து செய்துள்ளது.

பிரான்ஸ் சட்டத்தின் படி, நீதிபதி விதிக்கும் நிபந்தனையின் படி, கண்காணிப்பு மூலம் வீட்டிலேயே திரு. Nicoles Sarkozy இந்த தண்டனையை அனுபவிக்கலாம்.

>>>>><<<<<

ஹாங்காங்கில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 44-ஆக அதிகரித்துள்ளது.

700க்கும் மேற்பட்டவர்கள் மீட்கப்பட்டு, தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

279 பேரை காணவில்லை என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீயை அணைப்பதற்கு, 800க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

சுமார் 2 ஆயிரம் வீடுகள் அமைந்துள்ள இந்த குடியிருப்பில், நான்காயிரத்து 800 பேர் வசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தீ விபத்து சம்பவம் தொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஹாங்காங் காவல்துறையினர் கூறியுள்ளனர்.

>>>>><<<<<

சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் H.S. Prannoy காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

லக்னோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர், 21-15, 21-10 என்ற செட்கணக்கில் சகநாட்டு வீரர் Dalal Shashwat-ஐ வென்றார்.

மற்றொரு முதல் சுற்றில் Manraj Singh, S.M. Subramanian-ஐ வென்று, காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் Tanvi Sharma காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முதல் சுற்றில் அவர், 21-15, 21-19 என்ற செட்கணக்கில் Ashmita Chaliha-வை வென்றார்.

**>>>>><<<<<**

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்துப் போட்டி, தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியா 3-1 என்ற கோல்கணக்கில் சீன தைபே-யை வென்றது.

அஹமதாபாதில் நடைபெற்ற இப்போட்டியில் இந்திய அணியின் கேப்டன் Dallalmuon Gangte ஹாட்ரிக் கோல் அடித்தார்.

இந்தியா தனது அடுத்த ஆட்டத்தில் நாளை லெபனானை எதிர்கொள்கிறது.

**>>>>>END<<<<<**